மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதுபற்றிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அங்கே அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி, இருக்கின்ற சூழ்நிலைகளைப் பற்றி அரசுக்கு அவருடைய அறிக்கையை அனுப்ப வைக்குமாறு கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையும் பரிந்துரையும் வந்ததற்குப்பிறகு அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்ற யோசனைகளை அரசு பரிசீலனை செய்ததற்குப்பிறகு தக்க முடிவுகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படுகின்ற தகராறுகளை முறைப்படுத்துவதற்காக கைத்தறித் தொழில் பாதுகாப்புச் சட்டம் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால், தொழிலாளர்கள் வயிற்றுக்கு வழியில்லாமல் ஆத்திரப்பட்டு ஏதோ சில சம்பவங்களைச் செய்து வந்தார்கள். அவர்களை மன்னித்து அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, சட்டப் பிரச்னை பற்றிய எல்லா முடிவுகளையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே கேட்டுவிட்டார்கள், புலன் விசாரணையில் இருக்கிறது. எந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும், கவனிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையையும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களின் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுகின்ற விளைவுகளையும் வைத்து தக்க முடிவுகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

(ஆ) குடகனாறு அணையைப் புதுப்பித்தல்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:— தலைவர் அவர்களே, "1977ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த மதுரைமாவட்டம் குடகனாறு அணையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கையொன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் ரூ. 212 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசினால் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 434 மில்லியன் கன அடி ஆகும். இதனால் மதுரை மாவட்டத்தில் 2,230 ஏக்கர் புதிய ஆயக்கட்டு நிலங்களும் திருச்சி மாவட்டத்தில் 2,910 ஏக்கர்

நிலங்களும் பயன்பெறும். மற்றும் திருச்சி மாவட்டத்தில் 819 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி பெறுவது மட்டுமின்றி 356 ஏக்கர் நிலங்களின் பாசன பற்றாக் குறையையும் போக்கும் இவ்வணை டிசம்பர் 1973ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. Head works ஜூன் 76-ல் முடிக்கப்பட்டன. நவம்பர் 1977ல் 75 சதவீத கால்வாய் வேலைகள் முடிவடைந்தன.

இம்மாதத்தில் இதற்கு முன் கண்டிராத அளவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இவ்வணை உடைந்தது. இவ்வணை உடைப்பு சம்பந்தமாக விசாரிக்க அரசு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்தது;—

(1) திரு. ஏ. என். ஹார் கௌளி, தலைவர், மத்திய நீர்குழு, டெல்லி.

(2) திரு வி. ஆர். எஸ். பாண்டியன், முன்னாள் தலைமைப்-பொறியாளர் (பாசனம்).

(3) திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ்., முன்னாள் இணைச் செயலாளர் நிதித்துறை, சென்னை குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். 1977ஆம் ஆண்டு உடைந்த அணை இதுவரையில்கூடக் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகையால், அதை விரைவுபடுத்திக் கட்டுவதற்கான முயற்சி, விரைவாக எடுக்கப்படுமா? புதிதாக கட்ட இருக்கிற அணையினுடைய மதிப்பீடு எவ்வளவாக இருக்கும் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, குழுவின் அறிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவிலே தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அணை உடைந்தது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழு தனது அறிக்கையில் அந்த இடத்தில் கட்டப்பட்டதால்தான் அந்த அணை உடைந்தது என்றும், வறட்சியான அந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் அணையை அங்கே கட்டி, திருச்சி மாவட்டத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடாது; ஆகவே, அந்த அணையை மாற்று இடத்தில் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள் என்றும் எனவே மாற்றிக் கட்ட வேண்டுமென்ற கருத்தை குழு தெரிவித்திருக்கிறதா? ஆமென்றால், அந்தக் கருத்தை அரசு ஆழ்ந்து பரிசீலித்து, இடத்தை மாற்றி அணை கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இரகசியமான முறையிலே குழு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. எனவே, குழுவினுடைய அறிக்கையிலே என்ன, என்ன இருக்கிறது என்பதை எல்லாம் இந்த அரசு வெளியிடத் தயாராயில்லை. குழுவினுடைய அறிக்கையை கவனமாகப் பரிசீலனை செய்து அரசு தக்க முடிவுகளை எடுக்கும்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச்சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. வரவு—செலவுத்திட்டம் 1981-82, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கைஎண். 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 9— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ.18,45,19,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் துறை ஒவ்வொன்றுக்கும் சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை